ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ துவயச்சுருக்கு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ துவயச்சுருக்கு ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡இன் அமுதில் பிறந்தாள்⋆ இதங்கேட்க உரைத்த பிரான்⋆
பொன் அருளால் மறை மௌலியில் பூண்ட⋆ இரண்டிசைத்து⋆
தன் உரை மிக்க தனம் இதெனத்⋆ தந்த வேதகத்தில்⋆
துன்னு பொருள்கள் பத்தும்⋆ தொலையா நிதி ஆகின்றவே (1)

அரு உரு ஆனவை தன்னை அடைந்திடத்⋆ தான் அடைந்து⋆
வெருவுரை கேட்டவை கேட்பித்து⋆ அகற்றும் வினை விலக்கி⋆
இரு தலை அன்புதனால்⋆ எமை இன்னடி சேர்த்தருளும்⋆
திருவுடனே திகழ்வார்⋆ செறிந்தார் எங்கள் சிந்தையுள்ளே (2)

ஓர் உயிராய் நின்ற⋆ ஒண் சுடர் இன்ப உருத்தனிலும்⋆
பேர் உருவத்திலும்⋆ பின் அதில் தோற்றும் உருக்களிலும்⋆
ஓர் உருவான உலகிலும்⋆ ஏற்கும் உருக்களினால்⋆
சேருதல் மன்னு செய்யாள் அன்பர்⋆ நம் மனம் சேர்ந்தனரே (3)

காரணமாய் இறையாய்க்⋆ கதியாய் அமரும் பதியாய்⋆
ஆரணம் ஓதும் அனைத்துறவாய்⋆ அகலா உயிராய்ச்⋆
சீர் அணியும் சுடராய்ச்⋆ செறிந்தெங்குந் திகழ்ந்து நின்ற⋆
நாரணனார் நமக்காய் நல்கி⋆ நாம் தொழ நின்றனரே (4)

வான் அமர் மன் உருவாய்⋆ வகையால் அதில் நால் உருவாய்⋆
மீனமதாமை கேழல்⋆ முதலாம் விபவங்களுமாய்⋆
ஊன் அமர் உள்ளுருவாய்⋆ ஒளியாத அருச்சையுமாம்⋆
தேன் அமர் செங்கழலான்⋆ சேர்த்தனன் கழல் எம் மனத்தே (5)

www.prapatti.com

வேறொர் அணங்கு தொழும்⋆ வினை தீர்த்தெமை ஆண்டிடுவான்⋆
ஆறும் அதன் பயனும்⋆ தந்தளிக்கும் அருளுடையான்⋆
மாறிலதாய் இலகும்⋆ மது மெல்லடிப் போதிரண்டால்⋆
நாறு துழாய் முடியான்⋆ நமக்குச் சரண் ஆயினனே (6)

பெறுவது நாம் பெரியோர்⋆ பெறும் பேறென நின்ற எம்மை⋆
வெறுமை உணர்த்தி⋆ விலக்காத நன்னிலை ஆதரிப்பித்து⋆
உறு மதியால் தனை⋆ ஒண் சரண் என்ற உணர்வு தந்த⋆
மறுவுடை மார்பனுக்கே⋆ மன் அடைக்கலம் ஆயினமே (7)

அரு மறை யாதும் துறவோம் என⋆ அறிந்தார் கவரும்⋆
கருமமும் ஞானமும் காதலும் கண்டு⋆ முயலகிலோம்⋆
வருவதும் இந்நிலையாய்⋆ மயல் உற்ற எமக்குளதோ⋆
திருமகளார் பிரியாத்⋆ திருமால் அன்றி நற்சரணே (8)

சுருங்கா அகிலம் எல்லாம்⋆ துளங்கா அமுதக் கடலாய்⋆
நெருங்காதணைந்துடனே நின்ற⋆ நம் திருநாரணனார்⋆
இரங்காத காலங்கள் எல்லாம் இழந்த⋆ பயன் பெற ஓர்⋆
பெருங்காதல் உற்று⋆ இனிமேல் பிரியாமை உகந்தனமே (9)

கடி சூடு மூன்றும்⋆ கழல் பணிந்தார்க்குக் கடிந்திடவே⋆
முடி சூடி நின்ற⋆ முகில் வண்ணனார் முன் உலகளந்த⋆
அடி சூடு நாம் அவர் ஆதரத்தால்⋆ உடுத்துக் களையும்
படி சூடி⋆ அன்புடனே⋆ பணி செய்யப் பணிந்தனமே (10)

‡தனதன்றிவை எனத்⋆ தான் அன்றென மறை சொன்ன எலாம்⋆
எனதென்றும் யான் என்றும்⋆ எண்ணுதலால் வரும் ஈனம் எலாம்⋆
மனதொன்றி இன்று⋆ நம என்றதே கொண்டு மாற்றுதலால்⋆
தனதன்றி ஒன்றும் இல்லாத்⋆ தனித் தாதை சதிர்த்தனனே (11)

‡சேர்க்கும் திருமகள்⋆ சேர்த்தியின் மன்னுதல் சீர்ப் பெரியோற்கு⋆
ஏற்கும் குணங்கள்⋆ இலக்காம் வடிவில் இணை அடிகள்⋆
பார்க்கும் சரண் அதில் பற்றுதல்⋆ நம் நிலை நாம் பெறும் பேறு⋆
ஏற்கின்ற எல்லைகள் எல்லாம்⋆ களையறவெண்ணினமே (12)

*‖ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ‖*



www.prapatti.com